# இந்து மதம்

தவத்திரு ஸ்ரீ சாயிமாதா பிருந்தாதேவி
தமிழ்நாடு

''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' எனத் தொல்காப்பியம் கூறும். சாதாரண மனிதன் - சராசரி மனிதன் -உயர்ந்தவனாகச் சிறந்தவனாக, மேம்பட்டவனாக ஆவதற்கு ஆவன செய்வது சமயம்.

உடலை வளர்ப்பது சமையல்;

உள்ளத்தை வளர்ப்பது சமயம்.

உள்ளம் பெருங்கோயில் எனவும், ஊனுடம்பு ஆலயமெனவும் வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசலெனவும், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் எனவும், கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கெனவும் உணர்த்துவர் சமயச் சான்றோர்!

இவ்வுலகில், இரவும் பகலும் போல, இருளும் ஒளியும் போல இன்பமும் துன்பமும் கலந்தே நிற்கின்றன. துன்பத்தை நீக்கி இன்பத்தைக் காண இந்துமதம் மக்களுக்குக் கலங்கரை விளக்கம் போலக் காட்சி தருகின்றது.

இந்துமதம் என்பதன் உட்பொருளே அதன் அளப்பரிய பரிணாமத்தை நமக்குப் பக்குவமாக உணர்த்துகின்றது.

''ஆரியர்கள், சிந்து நதித் தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களைப் பாரசீகரும், கிரேக்கரும், ''சிந்துக்கள்'' என்று அழைத்தனர். அந்த சிந்துக்களுடைய மதமே இந்து மதமாயிற்று'' எனச் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். வேறு சிலரோ ''இந்திய நாட்டினரின் மதமே இந்து மதமாயிற்று'' என்கின்றனர்.

ஒரு நாட்டின் பெயராலோ அல்லது ஒரு நதியின் பெயராலோ நமது ஒப்பற்ற இந்துமதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றதாகும். ஆகவே இதன் உண்மைப் பொருளை நாமறிதல் அவசியமாகிறது.

''இந்துமதம்'' எனும் பெயர்; அதன் மேம்பட்ட உன்னதமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம் -து எனப் பிரிக்கலாம்.

ஹிம் - ஹிம்சையில், து - துக்கிக்கிறவன்.

ஒரு உயிர் எந்தக் காரணத்திற்காகவாவது வருந்துவதாக இருந்தால் அதற்காகத் தானும் வருந்தி, அத்துன்பம் தனக்கு வந்ததாகக் கருதி அதனை அகற்ற எவனொருவன் பணிபுரிகின்றானோ அவனே இந்து ஆவான். அப்பண்பு நலம் வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும்.

இக்கருத்தை, ''ஹிம்ஸாயாம் தூயதேயஸ: ஹிந்து இத்யபி தீயதே'' என்ற வேத வாக்காலும் உணரலாம். இதிலிருந்து, இந்து மதம் என்பதற்கு; அன்பு மதம், அருள் மதம், அறநெறி மதம், என நாம் பொருள் கொள்ளலாம். ''அஹிம்ஸா பரமோதர்ம: '' மேலான அறம் எனப்படுவது அஹிம்ஸையே!

அஹிம்ஸை என்ற அரும்பே அன்பாகிய மலராக மலர்கின்றது. அன்பிற்கு அடிப்படை அஹிம்ஸையேயாகும்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''
எனப் பத்தாந்திருமுறையும் சத்தாக உரைக்கிறது. ''இந்துமதம்'' என்பதற்கு, '' ஸநாதன தர்மம்'' எனப் பொருள் கூறுவாரும் உண்டு.

ஸநாதன தர்மம் என்றால் ''அழிவில்லாத அறம்'' என்பது பொருள். இதுவல்லாது இதற்குத் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்நெறி, சன்மார்க்கம் என்ற பெயர்களைச் சூட்டி அழைப்பதும் இயல்பே! மதத்தைச் சமயம் எனச்சொல்வதும் உண்டு.

சமயம் என்பதற்குச் ''சமை'' என்பது பகுதி. உடம்பை வளர்ப்பதற்கு, உணவுப் பொருள்களைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப் படுத்துவது சமயம்.

நமது கண்களால் காணப்பெறும் உலகத்தையும் அனுமானத்தால் அறியத் தகுந்த ஆன்மாவையும் எல்லாவற்றிற்கும் மேலாம் இறைவனையும், இனிது காட்டும் ஞானஒளி இந்து மதம்!

மனிதனுடைய உடல் நலத்திற்கும் உள்ளத்தின் நலத்திற்கும் உதவும் அமுதம் -இந்துமதம்!

மனிதர்கள் அன்போடு அளவளாவி வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கபீடம் -இந்து மதம்!

மனிதர்களுடைய இகபர வாழ்விற்குரிய நலன்கள் அனைத்தையும் அருளும் கற்பகத்தரு -இந்து மதம்.

இந்துமதம் காலத்தால் மிகவும் முந்தியது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதைத் தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் அறிகின்றோம்.

பிறமதங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்துமதத்தில் அநாதியாகவே இடம் பெற்றுள்ளன. ஆதலால், உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாயகமதம் இந்துமதம் எனக்கொள்ளலாம்.

ஏனைய மதங்கள் அனைத்தும் ஒவ்வொருவரால் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்துமதமோ யாரால்? எப்போது? எங்கு? உருவாக்கப்பட்டது என்பது எவருக்கும் தெரியாது. இது ஆதியானது; அந்தமும் அற்றது. ஆனால் அனைவர்க்கும் சொந்தமானது. இந்துமதத்தின் அறநெறி; வெறும் நம்பிக்கையோடு மட்டும் நின்றுவிடாமல், ஒவ்வொரு கொள்கையையும் ஆராய்ந்து, ஐயங்களை எல்லாம் அகற்றி அறிவினைப் புகட்டுகின்றது.

இந்துமதத்தின் அறநெறி: இல்லறத்தாரும் துறவறத்தாரும் முக்தி பெறலாம் எனக் கூறுகிறது. அதோடு இந்துமதத்தின் அறநெறி, உலக வாழ்க்கையோடு மதவாழ்க்கையையும் இணைத்து மேற்செல்ல -உய்கதி பெற வழி காட்டுகிறது.

ஆண், பெண், சிறுவர், சிறுமியர், வாலிபர், வயோதிகர், உயர்ந்த வகுப்பினர், தாழ்ந்த வகுப்பினர், எனும் பேதமில்லாது, யாவரும் முக்தி பெறலாம், என இந்து மதத்தின் அறநெறி அறிவிக்கின்றது.
மக்கள் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு, மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி, மக்களின் இன்ப துன்ப வாழ்வுக்குக் காரணம், அவரவர் வினைப் பயனே என்பதை, இந்துமத அறநெறி, அரிய பெரிய கருத்தை இனிய எளிய முறையில் எடுத்தியம்புகிறது.

இந்துமதம், விஞ்ஞானத்தாலும் உணரமுடியாத மெய்ப்பொருள்களைத் தனது மெய்ஞ்ஞானத்தால் இனிது இயம்புகிறது. உலகில் உள்ள ஒவ்வொரு மதத்திற்கும், அவரவர் போற்றி ஏற்ற முக்கியமானதாகக் கருதும் சமய நூல் ஒவ்வொன்று உண்டு.

நமது இந்து மதத்திற்கு, வேதம், ஆகமம் இதிகாசம், புராணம், சாத்திரம், தோத்திரம் எனப் பல நூல்கள் இருக்கின்றன. 'வேதம்' என்பதற்கு அறிவு நூல் என்பது பொருள்.

தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி, மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர் பெற்றது. ஆச்சார்யனிடம் கேட்டுத் தெளிய வேண்டிய நூல் இது ஆதலால் இதனைச் சுருதியெனவும் கூறுகின்றனர். இதனை; ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என நான்காக வியாச முனிவர் வகுத்துள்ளார்.

**இருக்** என்பதற்குத் துதித்தல் அல்லது வழிபடல் என்பது பொருள். இறைவனைத் துதிப்பாடல்கள் பாடி வணங்குவதற்குரிய வழிகளை இதில் வகுத்துக் கூறியுள்ளார். இது 10 மண்டலங்களைக் கொண்டது. ஒன்று முதல் ஏழு மண்டலங்களில் இறைவனை "அக்கினி" என்ற பெயராலும் பத்தாவது மண்டலத்தில் பிரமன், இந்திரன் என்ற பெயர்களாலும் பாடப்பட்டுள்ளது.

**யஜுர்வேதம்** 'யாஜ்' என்னும் பதத்திற்கு 'யாகம்' என்பது பொருள். யாகம், பலி, தானம் செய்யவேண்டிய முறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. அமாவாசை, பௌர்ணமி காலங்களில் செய்யப்படவேண்டிய வேள்விகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. மிகவும் சிறப்பு வாய்ந்த "ருத்ரம்" இதில் அமைந்துள்ளது.

**ஸாமவேதம்:** ஸாமம் என்னும் இன்னிசையால் பாடப்பெற்றது. இதில் பரமேஸ்வரனை, 'அக்கினி, இந்திரன்' முதலான பெயர்களால் பாடப்பெற்றிருக்கிறது. பாபத்தை நீக்கிப் பலனைக் கொடுக்கும் பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன. இசையுடன் இதனைப் பாடுவதால் பாபம் நீங்கும்.

**அதர்வணம்:** இதில் மந்திரம் உச்சரிக்கவேண்டிய முறைகளையும், விரோதிகளின் அழிவின் பொருட்டு செய்யவேண்டிய கிரியா முறைகளையும் கூறியிருப்பதோடு வேதசாரக் கிரியைகளையும் அனுஷ்டானங்களைகளையும் பற்றிய தோத்திரங்களும் உள்ளன. உபநிஷதங்கள் என்பது நான்கு வேதங்களின் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை, பிராம்மணம், ஆரணியகம் என்ற பாகங்களைச் சார்ந்தவை.

"உபநிஷத்" என்பதற்கு, ஆசாரியன் அருகில் அமர்ந்து அறிந்து கொள்ளப்படும் "ஞானம்" என்பது பொருள்.

உபநிஷத்துக்கள் நூற்றெட்டு இருந்தாலும், பத்து உபநிஷத்துக்களே சிறப்பாகக் கையாளப் பெறுகின்றன. இந்தப் பத்து உபநிஷத்துக்களுக்கு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். பின்னர் ஸ்ரீ இராமானுஜர், ஸ்ரீ வித்யாரண்யர், ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் முதலியாரும் பாஷ்யம் செய்திருக்கிறார்கள்.

இந்துமதத்தின் அறநெறியைப் பரப்ப - அள்ளி அள்ளி அகிலத்திற்கு வழங்க -சூரிய சந்திராளைப் போன்று இரண்டு உண்டு. ஒன்று வேதம். அதன் சுருக்கத்தை இப்போது கண்டோம். மற்றொன்று ஆகமம்.

"ஆகமம்" என்ற சொல்லை ஆ + கமம் எனப் பிரிக்கலாம். ஆ = ஆன்மாக்களின், கமம் = பாசங்களை நீக்கஞ்செய்து முக்திப் பேற்றை

அருளுவது என்பது பொருள்.

இறைவனது ஐந்து முகங்களிலிருந்தும் இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின என்று, காரணாகமத்தால் அறிகின்றோம்.

இவற்றிலே பத்து ஆகமங்கள் -சிவபேதங்களாகும்; பதினெட்டு ஆகமங்கள் ருத்ர பேதங்களாகும்.
ஆகமங்களில்:-

தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்ம தரிசனம், ஆத்மசுத்தி; சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் முதலிய தசகாரிய -அதாவது பத்துவித இலக்கணங்களும் உரைக்கப் பெற்றிருக்கின்றன.

இந்துமதம் காட்டும் அறநெறியின் சாரங்களைத் தோத்திரங்கள் என்று சொல்லக்கூடிய திருமுறைகளிலே சிறப்பாக நாம் காணலாம்.

''திருமுறை'' என்பதற்குத் தம்மை அடைந்தவர்களைச் சிவமே ஆக்குகின்ற முறை எனப்பொருள் கூறலாம். சைவத் திருமுறைகள் பன்னிரெண்டு. அவற்றிலே திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஒன்றிரண்டு மூன்று திருமுறைகளாகும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் நான்கைந்து ஆறு திருமுறைகளாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஏழாந் திருமுறையாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையார், எட்டாந்திருமுறையாகும். திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர்கள் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஒன்பதாந்திருமுறையாகும். திருமூலதேவர் அருளிச் செய்த திருமந்திரம் பத்தாந்திருமுறையாகும்.

திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் அருளியவை பதினோராந் திருமுறையாகும். சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணம் பன்னிரெண்டாந்திருமுறையாகும். இதிலே அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன.

முதல் ஏழு திருமுறைகள் ''தேவாரம்'' எனப்படும். 'தே' என்பதற்குத் தெய்வம் எனவும் ''ஆரம்'' என்பதற்கு, ''மாலை'' எனவும் பொருள் கொண்டு, ''தெய்வத்திற்குரிய பாமாலை'' எனக் கூறுவார்கள். ''திருவாசகம்'' என்பதற்குத் தெய்வத்தன்மை வாய்ந்த வாசகங்கள் கொண்ட நூல் என்பது பொருள்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. இப்பதினான்கு சாத்திரங்களும், இந்து மதத்தின் அரிய பெரிய உண்மைகளை, மிக நுணுக்கமாகக் கூறுகின்றன. ஆராய்ச்சி செய்து அகமகிழ இது ஒரு பெருஞ்சுரங்கமாகும். இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பர்.

இப்பதினான்கு சாத்திரங்களிலே தலைசிறந்தது - அரிய கருவூலம் போல விளங்குவது - சிவஞானபோதமாகும். சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள். ''ஞானம்'' என்றால் தெளிதல். ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை, அறிந்து தெளிதலுக்குரிய நூல் எனப் பொருள்படும். இது, மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப் பெற்றது. இதில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள்ளன.

இந்து மதம் காட்டும் அறநெறிகளை நாம் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காணக்கூடிய வழி வகைகளை நமக்கு உணர்த்துவது இதிகாசங்களேயாகும். ''இதிகாசம்'' என்பதற்கு ஐதீகத்தை நிரூபணம் செய்யும் ''வரலாறு'' என்று பொருள். வேத உபநிஷதங்களின் உட்பொருளை அடக்கிக் கதை வடிவத்தில் இவை எழுதப்பட்டுள்ளன.

இராமாயணமும் மஹாபாரதமும் இதிகாசங்களாகும். இராமாயணத்தை இயற்றிய மகரிஷி வால்மீகி; அரசநீதி, சத்யபரிபாலனம், புத்திரர் கடமை, பெரியோர் வழிபாடு, கற்புநெறியின் மேன்மை, முதலிய பல அறங்களை அள்ளிப் பொழிந்திருக்கிறார்.

பூர்வீகக் கிரேக்கருக்கு ஹோமரும், ரோமருக்கு வர்ஜிலும், இத்தாலியருக்கு டாண்டேயும், ஜர்மானியருக்குக் கதேயும், ஆங்கிலேயருக்கு ஷேக்ஸ்பியரும், மில்டனும் எப்படிப் புகழைச் சேர்த்தார்களோ அதுபோல இந்துக்களுக்கும் இந்து மதத்திற்கும் புகழைக் கூட்டித் தந்தவர் வால்மீகி முனிவராவார். இவர் தாம் இயற்றிய இராமாயண காவியத்தின் மூலமாகப் பல ஆயிரக்கணக்கான இந்துமத தர்மங்களை -அறங்களை, உயர்ந்த தத்துவ தரிசனங்களோடு, அழகாகப் பின்னப்பட்ட கதைகளோடு உவமைச் செழிப்போடு, உன்னத லக்ஷியத்தோடு எடுத்து விளக்குவதைக் கற்றோர் உணர முடியும்.

அடுத்த இதிகாசம் - பாரதம்!

இதனை இயற்றியவர் வியாசமுனிவர். இதனை ''ஐந்தாம் வேதம்'' என்றும் சொல்லுவார்கள். இதில் இல்லாத அறங்களே கிடையாது. எல்லாத் தர்மங்களும் இதிலே அடக்கம். உலக மக்கள் கடைப்பிடித்து நடக்க வேண்டிய உலக அறம் இதிலே உபதேசிக்கப் படுகின்றது.

வியாசபகவான் தனது மாபெரும் ஞானத்திறத்தால், முதிர்ந்த அறிவின் பேரொளியால் பாரதத்தை இயற்றிப் பாருக்கு அளித்துள்ளார். ஸ்ரீ கிருஷ்ண பகவான், அர்ஜுனனுக்கு உபதேசித்தருளிய ஸ்ரீ பகவத் கீதையும் எழுநூறு சுலோகங்களாக, பாரதத்திலே இடம்பெற்றிருப்பது ஒன்றே போதும்!

பாரதம், பாரத நாட்டின் காமதேனு;
கற்பகத்தரு; நந்தா விளக்கு;

நானிலத்தில் சுடர்விடும் ஞானபானு என்பதைக் கீதை காட்டும் அறநெறிப் பாதையின் மூலம் பண்பட்டோர் பகர்வர்! இந்த இரு இதிகாசங்களும் தர்ம அதர்மப் போராட்டத்தில், தர்மமே முடிவில் வெற்றி பெறும் என்பதை நிலைநாட்டி, இந்து

மதத்தத்துவக் கோட்பாடுகளுக்குச் சிகரம்போல விளங்குகின்றன.

இந்துமதம் காட்டும் அறநெறிக்கு அரிய சான்றாக விளங்குபவை -புராணங்களாகும். ''புராணம்'' என்பதற்குப் ''பழைய வரலாறுகள்'' என்பது பொருள். புராணங்கள் பதினெட்டு ஆகும்.

''ஸத்யம் வத; தர்மம் சர''

''உண்மை பேசு; தர்மத்தைச் செய்'' என்று வேதம் வழிகாட்டுகிறது. ''நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு நான் சொல்லுவேன்'' என்பது போல, மேலே கண்ட இரண்டு சின்னஞ் சிறு வாக்கியங்களும் அமைந்து,

''ஸத்யம் வத; தர்மம் சர''

என்று சொல்லி, நமக்கு அருகில் என்றும் நின்று, நம்மை வழி நடத்துகிறது. இந்தப் பேருண்மையான அறத்தைப் புராணங்கள் வாயிலாக நமது மூதாதையர்கள் நமக்குப் புரிய வைக்கிறார்கள்.

நன்றி: இந்துமதம்

